**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# கலாத்தியர்
## பாடம் 15 சிலுவையிலரயப்பட்டும் பிழைத்திருத்தல் – பாகம் 2

***கலாத்தியர் 2:20-21, 20. கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையி லறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.21. நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப் பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.*** *"*

*கடைசி படத்தில் நாம் பார்த்தவை,*

1. ***நாம் சுயத்திற்கு சாக வேண்டும்***
2. ***மாம்ச சித்தத்திற்கு நாம் சாக வேண்டும்***

### *3. நாம் பாவத்திற்கு சாக வேண்டும்.*

***1 பேதுரு 2:24, நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்***

*மீண்டுமாக, கிறிஸ்து நமக்காக மரித்தது மட்டுமில்லாமல், நாமும் அவருடன் மரிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்.*

*இதை சில சமயம் தவறாக புரிந்து கொள்ளவும் கூடும். உள்ளத்தில் பாவமில்லாமல் இருப்பது கூடாத காரியம் என்று நம்மெல்லோருக்கும் நன்றாக தெரியும்.*

*நான் ஒரு பாவி தேவனின் கிருபையால் இரட்சிக்கப் பட்டேன், என்னுடைய இரட்சிப்பிற்கு என்னுடைய கிரியைகள் காரணம் அல்ல, என்னை நான் மெச்சிக்கொள்ள முடியாது என்பது எனக்கு நன்றாக தெரியும்.*

*கொஞ்சமும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் இதை நீங்களும் உங்கள் சொந்த வாழ்க்கையில் அறிந்து அனுபவித்தது உண்டு.*

*இருப்பினும் நாம் தியானிக்கும் வேதம், நாம் தனியாக இல்லை என்று நமக்கு தெளிவாக ஒரு காரியத்தை சொல்லுகிறது.*

*நமக்குள் வாசம் செய்யும் தேவ ஆவியானவர் நமக்கு உண்டு, கிறிஸ்துவின் சுவாபம் நம்மை ஈர்க்கிறது, மற்றும் தேவனின் கற்பனைகளில் நம்மை நடத்துகின்றார்.*

*சில கிறிஸ்தவர்கள் தங்களை தாழ்மை உள்ளவர்களாக காண்பிக்கும் பொருட்டு ஜெபம் மூலமாக, நான் ஒரு பாவி தேவ கிருபையால் இரட்சிக்கப்பட்டேன், பாவமில்லாமல் வாழ முடியாது, அந்த பாவம் தான் தன்னை மன்னிப்பிற்காக தேவனிடம் கொண்டு செல்கிறது என்கின்றனர். ரோம சபையில் பவுல் அங்குள்ள பிரச்சனைக்கு தீர்வு சொல்வது போலவே இந்த செயலும் உள்ளது,*

***"ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று***

***சொல்லுவோமா? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? " (ரோமர் 6:1-2).***

*நம்முடைய மாம்சத்தில் நாம் வேறு வழியில்லாமல் பாவம் செய்தோம், அது நம்முடைய சுவாபம். ஆனால் கிறிஸ்துவுக்குள் நம்மால் பாவம் செய்யாமல் வாழ முடியும், அது அவருடைய சுவாபம். எனவே எந்த சுவாபத்தை நாம் பின்பற்ற போகிறோம் என்பது நம் கையில் உள்ளது.*

*எனவே இது இரண்டு விதமான மரணத்தை உள்ளடக்கியது:*

***a) நாம் பாவத்தின் குற்ற உணர்விற்கு மரிக்க வேண்டும்.***

***ரோமர் 6:3-7, கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? 4. மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரி லிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். 5. ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்ட வர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். 6. நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். 7. மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப் பட்டிருக்கிறானே***

- ✓ *பழைய மனுஷன் சிலுவையிலரயப்பட்டாயிற்று, எனவே பாவ சரீரமும் ஒழிந்து போயிற்று. **(வ 6)***
- ✓ *நாம் பாவத்திற்கு மரித்து அவரின் மரணத்தோடு ஒன்றிணைக்கப்பட்டோம். **(வ 5-6)***
- ✓ *மாம்சமாக நாம் மரிக்கும்போது ஆவி சரீரத்தை விட்டு பிரிகிறது (**யாக்கோபு 2:26**). நாம் ஞானஸ்நானம் எடுக்கும் போது பாவ சரீரம் நம் ஆத்துமாவை விட்டு பிரிகிறது. மரித்தவர் பாவத்திலிருந்து நீக்கப்பட்டார் (**வ** 7).*

***ரோமர் 6:17-18, முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப் பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். 18. பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்.***

*தேவன் உங்களுக்கு கற்பிப்பவைகளுக்கு நீங்கள் முழு இருதயத்தோடு கீழ்ப்படியும் போது நீங்கள் நீதிக்கு அடிமைகளாகிறீர்கள். அதன் விளைவாக நீங்கள் பாவத்திலிருந்து விடுதலை ஆகிறீர்கள். இது ஞானஸ்நானத்தை கிறிஸ்துவின் இறப்போடு சேர்க்கிறது (**வ 3&4**). அவரின் மரணம் நம் பாவத்தை மன்னிக்கிறது (பாவத்திற்கு மரிப்பது) மற்றும் நாம் புதிய வாழ்க்கை வாழ எழுப்பப்பட்டோம்.*

***உங்கள் பழைய பாவ மனுஷன் சிலுவையிலரயப் பட்டாயிற்றா?***

*இல்லையென்றால் நீங்கள் இன்னும் பாவத்தில் உள்ளீர்கள் என்று அர்த்தம் மற்றும் அது நித்திய மரணத்திற்கு கொண்டு சேர்த்து விடும்.*

*ரோமர் 6:23,*

***பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.***

*நீங்கள் கிறிஸ்துவோடு சிலுவையிலரயப்பட்டால் பாவத்தின் குற்ற உணர்வை நீங்கள் கொள்ளலாம் அல்லது அது உங்களை கொன்று விடும்!*

*இது ஆவிக்குரிய வாழ்க்கை மற்றும் மரணத்தை குறித்தானவை.*

***b) பாவ பழக்கத்திற்கு நாம் மரிக்க வேண்டும்.***

***ரோமர் 6:1-2, ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே. 2. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?***

*நாம் பாவத்திற்கு மரித்தால் குற்ற உணர்வு விலகி விடும்.*
*என் திரும்ப பாவ பழக்கத்திற்கு செல்ல வேண்டும்?*
*உங்கள் வாழ்க்கையில் அது ஏன் தொடர அனுமதிக்கிறீர்கள்?*

*இதைத்தான் சிலர் செய்ய முற்படுகின்றனர். நாம் பாவத்திற்குத் திரும்பி மன்னிப்பைப் பெறுவது என்ன நல்லது?*

***ரோமர் 8:13-14, மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். 14. மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.***

*மாம்சத்தின்படி பிழைத்தால் ஆவிக்குரிய மரணம் ஏற்படும். அந்த மரணத்தை தவிர்க்க நாம் சரீரத்தின் செயல்களை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் (பாவம்).*

*நாம் தேவனுடைய வார்த்தையின் மூலம் ஆவியானவரால் நடத்தப்பட்டு பாவத்தை தவிர்க்க வேண்டும். இல்லையென்றால் நாம் மரித்து விடுவோம்.*

---

***ஒன்று பாவம் சாக வேண்டும்***
***இல்லையென்றால் நாம் மரிப்போம்.***

---

*நீங்கள் புரிந்து கொள்ள ஒரு உதாரணம் தருகிறேன். திரைப்படங்களில் நல்லவர் அதாவது ஹீரோவுக்கும், கெட்டவன் அதாவது வில்லனுக்கும் இடையில் வித்யாசம் காட்டப்படும். இருவரில் யாரோ ஒருவர் சாகப்போகிறார் என்று நாமெல்லோருக்கும் தெரியும்.*
*அது ஹீரோ அல்லது வில்லன்.*

*உங்களுக்கும் எனக்கும் பாவத்துடனான மோதல் தினமும் உண்டு.*
*ஒன்று நாம் அதைக் கொன்றுவிடுகிறோம், அல்லது அது நம்மைக் கொல்லுகிறது.*

*உங்கள் வாழ்க்கையில் பாவம் சிலுவையில் அறையப்பட்டதா, அல்லது அது உயிருடன் நன்றாக இருக்கிறதா??*

***1 கொரிந்தியர் 15:31, நான் அநுதினமும் சாகிறேன்; அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் உங்களைக்***

***குறித்து நான் பாராட்டுகிற மேன்மையைக்கொண்டு சத்தியமாய்ச் சொல்லுகிறேன்.***

***கொலோசெயர் 3:3-14,***

*பாவத்திற்கு மரிப்பது என்பது நாம் சில பாவங்களுக்கு மட்டுமல்ல, எல்லா பாவங்களுக்கும் மரிக்க வேண்டும் என்பதாகும்.*

***வ 3-7, 3. ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. 4. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.5. ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள். 6. இவைகளின்பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும்.7. நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்துகொண்டுவந்தீர்கள்.***

*நாம் பாவத்திற்கு மரித்தோம் எனவே பூமிக்குரியவைகளையும் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். ஏனென்றால் அவைகளால் நம்மேல் தேவ கோபாக்கினை வரும். சரீரம் மரிக்கும் போது எல்லா உறுப்புகளும் மரிக்கிறது, ஒரு சில உறுப்புக்கள் உயிரோடு இருக்கிறது என்றால் சரீரம் மறுக்கவில்லை என்று அர்த்தம்.*

*"விபச்சாரம், அசுத்தம், காமவிகாரம், தீய சிந்தனை" - சட்டவிரோத பாலியல் உறவுகளை மட்டுமல்ல, அவைகளை ஊக்குவிக்கும் விஷயங்களையும் தள்ளி வைக்கவும். அசுத்தமான திரைப்படங்கள் மற்றும் இசை, ஆபாச படங்கள்,*

*நடனம், குறைந்த அளவு கொண்ட மற்றும் அநாகரீகமான ஆடைகள்.*
*அவைகளை நீங்கள் மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தீர்களா?*

*" பேராசை "- பொருளாசை மற்றும் பொருள் விஷயங்களுக்கு அதிக முக்கியத்துவம்.*
*வியாபாரத்தில் முன்னேற நீங்கள் பொய் சொல்கிறீர்களா, திருடுகிறீர்களா, ஏமாற்றுகிறீர்களா??*
*சூதாட்டம்?*

*உங்கள் பிள்ளைகளை புறக்கணிப்பது, வேதாகம பாடம், அல்லது மற்றவர்களுக்கு போதிப்பது போன்றவற்றை உங்கள் இன்பத்திற்காக உடமைக்காக நிராகரிக்கிறீர்களா?*

***வ 8-10** - " கோபமும் மூர்க்கமும் பொறாமையும் "*
***8. இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்.***
***9. ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு,***
***10. தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே.***

*நீங்கள் உங்கள் கட்டுப்பாட்டை இழந்து மிகவும் கடினமான வெறுப்பான காரியங்களால் மற்றவர்களை காயப்படுத்துகிறீர்களா?*

*உங்களை காயப்படுத்தியவர்களை அதே போல் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு உள்ளதா?*

*உங்களிடம் மக்கள் மனம் திரும்பி மன்னிப்பு கேட்ட பின்பும் அவர்களை பழி தீர்க்க வேண்டும் என மூர்க்கம் கொண்டு உள்ளீர்களா?*

*" தூஷணம், வம்பு வார்த்தைகள், பொய் "*
*உண்மையில்லாததை மக்களை நம்ப வைக்க நீங்கள் உண்மையை கலங்க பண்ணி அல்லது முக்கியமானவைகளை புறக்கணிக்கிறீர்களா?*

*அவர்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக நீங்கள் அவதூறு செய்கிறீர்களா?*

*நீங்கள் இரட்டை அர்த்தம் உள்ள நகைச்சுவை செய்கிறீர்களா, ஒழுக்கமில்லாத வார்த்தைகள், அல்லது தேவனின் நாமத்தை தூஷிக்கும் வகையில் பேசுகிறீர்களா?*

***வ 11-14**, இந்த பாவங்கள் அனைத்தும் நல்ல பழக்கங்களால் மாற்றப்பட வேண்டும்.*
***11. அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும் விருத்தசேதனமில்லாத வனென்றுமில்லை, புறஜாதியானென்றும் புறதேசத் தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்று மில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்.12. ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; 13. ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். 14. இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்***

*" பிரியமும்,இரக்கமும்,தயவும் "*

*நீங்கள் உங்களை மற்றவர் கோணத்தில் வைத்து அவர்களின் காணோட்டத்தில் பார்க்க முற்பட்டு இருக்கிறீர்களா?*

*மற்றவர்கள் தவறை சுட்டி காட்டும் போது அவர்கள் மேல் உள்ள கரிசணையில் தான் சுட்டி காட்டுகிறீர்களா?*

*சிலர் மற்றவர்களை விரைவாக விமர்சிக்கிறார்கள். நாமும் அதை அவர்கள் மேலுள்ள நல்ல நோக்கத்தில் செய்கிறோமா அல்லது விவாதத்தில் வெல்ல வேண்டும் அல்லது நம் வழிக்கு வர வேண்டும் என்ற நோக்கில் செய்கிறோமா?*

*" மனத்தாழ்மையும், சாந்தமும் "*

*“எல்லாம் என் இஷ்டம் தான்” என்று நாம் நம்முடைய பாதையில் விடாப்பிடியாக இருக்கிறோமா, அல்லது தேவனின் சித்தத்திற்கு அர்பணிக்கிறோமா?*

*மற்றவர்களுக்காக விட்டு கொடுக்கும்போது பாவமில்லாமல் செய்கிறோமா?*

*நம் நம்முடைய பாவங்களை உணர்ந்து ஒப்புக்கொள்கிறோம் அல்லது அதை நியாயப்படுத்தி எல்லாம் தெரிந்தவர் போல் உள்ளோமா?*

*" நீடியபொறுமை,சகிப்புத்தன்மை,மன்னிக்கும் குணம் "*

*மக்கள் நம்மிடம் மன்னிப்பு கேட்கும் போது நாம் உண்மையில் மன்னிக்கிறோமா அல்லது விரோதத்தை உள்ளே வைத்து இருக்கிறோமா?*

*மக்கள் செய்த பாவத்தை மறக்காமல் நேரம் வரும்போது எல்லாம் அதை அவர்களுக்கு குத்தி காட்ட ஒரு ஆயுதம் போல உபயோகிக்கிறோமா?*

*மேல் சொல்லப்பட்ட எல்லாவற்றிலும் "நாம் அன்பை முன்வைக்கிறோமா "*

*நாம் பிறருக்கானவைகளை தேடுகிறோமா அல்லது சுயநலமாக நமக்குரியவைகளை தேடுகிறோமா?*

*நாம் எல்லோரிடமும் நல்ல எண்ணத்தில் தான் பழகுகிறோமா?*

*கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்படுவது என்பது பாவத்தைக் கொல்வதாகும். ஆனால் பிரச்சனை என்னவென்றால், பாவம் எளிதில் இறக்காது. நாம் குற்ற எண்ணத்திலிருந்து விடுபட்டாலும், அந்த தீய பழக்கத்தை அல்லது தீய செயலை மரணத்திற்குப்படுத்திவிட்டோம் என்று நினைத்தாலும், அது நாம் வாழ்வில் மீண்டும் வர வழி உண்டு. நாம் பாவத்திற்குரிய எல்லா பாகங்களையும் மரணத்திற்குப்படுத்தி அங்கையே வைத்து விடவேண்டும்.*

*முழுமையாக நாம் ஆண்டவருக்காய் வாழ அற்பணிக்கும்போது அதாவது சுயத்திற்கு மரித்து வாழும் போது, பாவத்திற்கு மரிப்பதும் நீதிமானாய் வாழ்வதும் எளிதாகும். நாம் பாவத்தில் விழாமல் வாழ முயற்சித்து தடுமாறும் போது மற்றும் தேவனின் நோக்கத்தை நிறைவேற்ற தடுமாறும் போதும் நாம் மீண்டும் கிறிஸ்துவுடனான உறவில் அஸ்திபாரத்திற்கு சென்று நம்மை முழுவதும் அவரின் பணிக்காய் அர்ப்பணிக்க வேண்டும். நம்மை நாமே சிலுவையில் அறைய வேண்டும்.*

## *முடிவுரை*

***2 தீமோத்தேயு 2:11, இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்.***

*இயேசுவோடு வாழ, நாம் அவருடன் மரிக்க வேண்டும். முதலில் வாழ்க்கை, பின்னர் மரணம் என்று நாம் பொதுவாக நினைக்கிறோம். அனால் இயேசு கற்று தருகிறார், நாம் முதலில் ஆவியில் மரிக்க வேண்டும், அப்பொழுது தான் பிழைப்போம்.*

*நாம் சுய சித்தத்திற்கும், மற்றவரின் சித்தத்திற்கும், பாவத்திற்கும் மரித்தால் தான் நித்திய வாழ்வை பெற முடியும்.*

***கலாத்தியர் 5:16-18, 16. பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். 17. மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. 18. ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல***

***1 கொரிந்தியர் 9:27, மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.***

***கொலோசெயர் 3:2-7, பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். 3. ஏனென்றால், நீங்கள்***

***மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. 4. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப் படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப் படுவீர்கள். 5. ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர் இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். 6. இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வரும். 7. நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்து கொண்டுவந்தீர்கள்.***

*இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்.*

*இது வெறுமனே பக்திமிக்க மதப் பேச்சு அல்ல, பவுல் இதை உண்மையாய் கூறுகிறார்.*

- ✓ *அது அவருக்கு இப்போது வாழ்க்கையை தருகிறது,*
- ✓ *அது அவரை உற்சாகப்படுத்துகிறது,*

*அவரை நோக்கத்துடனும் ஆர்வத்துடனும் நிரப்புவது அவரின் சுயம் அல்ல கிறிஸ்துவே!*

***புதிய வாழ்க்கை என்பது விசுவாச வாழ்க்கை!***

*பவுல் இங்கு சிலுவையில் தனக்கு பதிலாக கிறிஸ்துவை வைத்ததை ஏற்றுக்கொண்டு அதை தேர்ந்தெடுத்தது மட்டுமில்லாமல் தன் வாழ்க்கையிலும் அவரே வாழ விட்டு கொடுக்கிறார்!*

*தன் வாழ்க்கையில் தான் வாழாமல் சில அடிகள் பின் வைத்து, அவருக்குள் வாழ்கிற இயேசுவை முன் வைத்து அவர் வாழ அதாவது இயேசு வாழ வழி வகுக்கிறார்.*

***WWJD - What Would Jesus Do***
***இயேசு என்ன செய்வார்***
*பவுல் அப்படித்தான் வாழ்ந்தார்!*

*பவுல் சொல்லுகிறார், நான் என் வழியில் வாழாமல் இயேசுவிற்கு வழி விட்டு அவரை வாழ விடுகிறேன்*

***IWLJDI - I will let Jesus do it!***
***நான் இயேசு காரியங்களை செய்ய வழி வகுக்கிறேன்***

***வ 21, நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்கு கிறதில்லை; நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே. "***

*யூதர்களின் பிழைக்கு பவுல் மரண அடி கொடுக்கிறார். நம்முடைய சுய முயற்சியால் நீதியானது வந்தால், இயேசு மரித்தது வீணாகுமே. சிலுவை போதுமானது, மற்ற எந்த கிரியையும் இரட்சிப்பை கொடுக்க முடியாது!*

*வசனம் 21ல் பவுல் சொன்ன நீதியானது, தேவனுக்கு முன்பாக நாம் குற்ற மனசாட்சியை போக்கியதோடு மட்டும் இல்லாமல், நம் தினசரி வாழ்க்கையில் ஒன்றிணைந்து இருக்கும் நீதியை குறிக்கிறது.*

*நம்முடைய பாவம் மன்னிக்கப்படுதல் எப்படி விசுவாசம் சார்ந்ததோ நாம் கிருபையில் வளருவதும் விசுவாசம் சார்ந்ததே என பவுல் தெளிவாக குறிப்பிடுகிறார். நடைமுறையில் உள்ள நீதியை சுய கிரியைகளினாலோ அல்லது நம்முடைய வரைமுறைகள் விதிமுறைகள் மூலம் அடைய முடியாது. கிறிஸ்துவை விசுவாசத்தின் மூலம் பார்ப்பதால் மட்டுமே வரும்*

- ✓ *இயேசு உங்களுக்காக மரித்தார். அவருக்காக நீங்கள் மரித்தீர்களா??*

- ✓ *உங்களை முழுமையாக வெறுத்து சுயத்திற்கு மரித்தீர்களா, ஆண்டவருக்காய் சேவை செய்ய அர்பணித்தீர்களா?*

- ✓ *நீங்கள் மற்றவர்களின் விருப்பத்திற்கு மரித்து, மற்றவர்களுக்கு என்ன வேண்டுமானாலும் சரி, கிறிஸ்துவின் போதனைகளை மட்டுமே பின்பற்றுவேன், மற்றும் அவருக்கே கீழ்ப்படிவேன் என்று உறுதியாக உள்ளீர்களா?*

- ✓ *விசுவாசித்து ஞானஸ்நானம் எடுப்பதன் மூலம் உங்கள் பழைய பாவ மனுஷனை சிலுவையிலறைந்தீர்களா?*

- ✓ *உங்கள் தினசரி வாழ்க்கையில், பாவத்தின் பழக்கத்தை நீங்கள் தினமும் சிலுவையில் அறைகிறீர்களா??*

- ✓ *"ஆணிகள் உங்கள் கைகளிலும் கால்களிலும் பாய்ந்து சென்றதா?"*

- ✓ *நன்றாக வாழ முயற்சிக்க வேண்டாம், அதை விட்டு விட்டு கிறிஸ்துவை உங்களில் நன்றாக வாழ விடுங்கள்*

- ✓ *வளருவதற்கு முயற்சி செய்வதை விட்டு விடுங்கள், கிறிஸ்து உங்களுக்குள் வாழ விடுங்கள் வளர்ச்சி தானாய் நடைபெறும்*

- ✓ *உங்கள் வாழ்க்கையில் அலைகளால் அடிக்கப்படும் போது நீங்கள் சுய முயற்சி செய்யாமல் உங்கள் எல்லா தடுமாற்றத்திலும் சவால்களிலும் இயேசுவை சார்ந்து கொண்டு அவரின் கையில் முழு பொறுப்பையும் விட்டு விடுங்கள்.*